வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 3.6.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

7 கட்டங்களாக நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் பதிவான வாக்குகளை நாளை எண்ணி முடிக்க, அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

புதுச்சேரி மக்களவை தொகுதியில், நாளை இரவு 7 மணி முதல், **9 மணிக்குள், தேர்தல் முடிவுகள்** அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப் படுவதாக, மாவட்ட தேர்தல் அதிகாரி திரு குலோத்துங்கன் கூறி உள்ளார்.

தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் 100-ஆம் ஆண்டு பிறந்த நாளான இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி அன்னாருக்கு புகழாரம் சூட்டி உள்ளார்.

21-ஆம் நூற்றாண்டில் உலகமே மிகுந்த நம்பிக்கையுடன், பாரதத்தை எதிர்நோக்கி இருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

வாக்கு எண்ணிக்கை

கடந்த ஏப்ரல் 19 முதல், ஜுன் 1 வரையிலான காலத்தில், 7 கட்டங்களாக நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் பதிவான

வாக்குகளை நாளை எண்ணி முடிக்க, எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. சட்டமன்ற தேர்தலுடன் சேர்த்து ஒடிசா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் நடைபெற்ற மக்களவை தேர்தலில் பதிவான வாக்குகளும், மற்றும், சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தல்களில் பதிவான வாக்குகளும் நாளை எண்ணப்படும். நாளை காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கும் என்றும், வாக்கு எண்ணிக்கை நிலவரங்கள் மற்றும் முடிவுகள் தேர்தல் ஆணையத்தின் அதிகாரப் பூர்வ இணையதளம், மற்றும், ஓட்டர் ஹெல்ப் லைன் செயலியில் கிடைக்கும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. தேர்தல் நடத்தும் அதிகாரிகள், மற்றும், வாக்கு எண்ணிக்கை முகவர்கள் பற்றிய கையேடு ஒன்றும், ஆணையத்தின் இணையதளத்தில் வெளியிடப் பட்டுள்ளது. வாக்கு எண்ணிக்கை ஏற்பாடுகள், எண்ணிக்கை நடைமுறைகள், மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களின் பாதுகாப்பு உட்பட பல்வேறு அம்சங்கள் பற்றிய விரிவான அறிவுறுத்தல்களும் ஏற்கனவே இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

*குலோத்துங்கன்*

புதுச்சேரி மக்களவை தொகுதியில் கடந்த ஏப்ரல் -19-ஆம் தேதி நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகள், யூனியன் பிரதேசத்தின் அனைத்து 4 பிராந்தியங்களிலும் மொத்தம் 5 மையங்களில், நாளை

எண்ணப்பட உள்ளன. புதுச்சேரியில், லாஸ்பேட் மோதிலால் நேரு பாலிடெக்னிக் கல்லூரி, மகளிர் பொறியியல் கல்லூரி ஆகிய 2 மையங்களிலும், காரைக்காலில் அறிஞர் அண்ணா அரசு கலை-அறிவியல் கல்லூரி, ஏனாமில் டாக்டர் SRK அரசு கலைக்கல்லூரி, மற்றும், மாஹேயில் ஜவஹர்லால் நேரு அரசு மேல்நிலைப் பள்ளியிலும், நாளைக் காலை 8 மணிக்குத் தொடங்கி வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என்று, புதுச்சேரி மாவட்ட ஆட்சியரும், மாவட்ட தேர்தல் அதிகாரியுமான திரு.குலோத்துங்கன், இன்று எமது செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அனைத்து 5 வாக்கு எண்ணிக்கை மையங்களிலும், கண்காணிப்பாளர், உதவியாளர், நுண் பார்வையாளர் என ஆயிரத்து இரண்டு பேர் பணி அமர்த்தப் பட்டுள்ளதாகவும், இவர்களுக்கு ஏற்கனவே 2 கட்ட பயிற்சி அளிக்கப் பட்டுள்ளதாகவும், திரு குலோத்துங்கன் தெரிவித்தார்.வாக்கு எண்ணிக்கை மையங்களில் மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாகவும் வாக்கு எண்ணிக்கை மையங்களைச் சுற்றி, பொது மக்களை பாதிக்காத விதத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். வாக்கு எண்ணிக்கை தொடர்பாக புதுச்சேரி மக்களவை தொகுதிக்கு தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட 12 பார்வையாளர்கள், ஏற்பாடுகள் குறித்து திருப்தி

வெளியிட்டுள்ளதாகவும் அவர் கூறினார். புதுச்சேரி மக்களவைத் தொகுதியில் தேர்தல் முடிவுகள், நாளை இரவு 7 மணி முதல், 9 மணிக்குள் அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப் படுவதாக, திரு குலோத்துங்கன் மேலும் கூறினார்.

(வாய்ஸ்)

*மோடி-கருணாநிதி*

தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் 100-ஆம் ஆண்டு பிறந்த நாளான இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி அன்னாருக்கு புகழாரம் சூட்டி உள்ளார். பொது வாழ்வில் நீண்ட காலம் ஈடுபட்டவரான கருணாநிதி, தமிழ்நாடு மற்றும் தமிழக மக்களின் முன்னேற்றத்திற்கு பாடுபட்டவர் என்றும், அறிவார்ந்த தன்மைக்காக அனைவராலும் மதிக்கப் பெற்றவர் என்றும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறி உள்ளார். புதுடெல்லியில் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திருமதி சோனியாகாந்தி மற்றும் இதர எதிர்கட்சித் தலைவர்களும், கருணாநிதியின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். புதுச்சேரியில் இன்று, சட்டப் பேரவை வளாகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் கருணாநிதியின் திருவுருவப் படத்திற்கு செய்தி-விளம்பரத் துறைச் செயலர் திரு கேசவன், துறையின்

இயக்குநர் திரு தமிழ்ச்செல்வன் ஆகியோர் அரசு சார்பில் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

மோடி-சிந்தனை

21-ஆம் நூற்றாண்டில் உலகமே மிகுந்த நம்பிக்கையுடன், பாரதத்தை எதிர்நோக்கி இருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இன்று நாட்டு மக்களுக்கான கடிதம் ஒன்றின் மூலம் தமது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்ட அவர் இந்தியாவில் ஆட்சி நடக்கும் விதம், பல நாடுகளுக்கு எடுத்துக் காட்டாக மாறி இருப்பதாக தெரிவித்தார். மக்களுக்கு உகந்த நல்லாட்சி, வளர்ச்சி ஆர்வம் அதிகமுள்ள மாவட்டங்கள், வளர்ச்சி ஆர்வம் அதிகமுள்ள வட்டாரங்கள் போன்ற, இந்தியாவின் புதுமையான நடைமுறைகள், தற்போது உலக அளவில் பேசப்படுவதாகவும், பத்தே ஆண்டுகளில் 25 கோடி பேர் வறுமையில் இருந்து மீட்கப்பட்டது, உலகில் முன் எப்போதும் காணாத சாதனை என்றும் அவர் குறிப்பிட்டார். அரசின் கடமைகளை கடைக்கோடி மக்கள் வரை கொண்டு சென்று, அதிகாரப் பங்கேற்பை மேம்படுத்துவதற்கான தமது அரசின் முயற்சிகள், உலகிற்கே ஊக்கமாக திகழ்வதாகவும் அவர் கூறினார். ஜி-20 மாநாட்டின் வெற்றியைத் தொடர்ந்து உலக அரங்கில் இந்தியாவின் பங்களிப்பு அதிகரித்துக் கொண்டே வருவதாகவும், தற்போது தெற்குலக நாடுகளின் வலுவான குரலாகவே உலக நாடுகள்

இந்தியாவை அங்கீகரித்து இருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார். ஜி-20 கூட்டமைப்பின் உறுப்பு நாடாக, ஆப்பிரிக்க ஒன்றியம் சேர்த்துக் கொள்ளப்பட்டதற்கு, இந்தியாவின் முன் முயற்சிகளே காரணம் என்றும், இது ஆப்பிரிக்க நாடுகளின் எதிர்காலத்திற்கு, முக்கியத் திருப்பு முனையாக திகழும் என்றும் அவர் கூறினார். உலக அளவில் இந்தியாவின் முக்கியத்துவம் அதிகரித்து வரும் நிலையில், வளர்ச்சியில், வேகம், அளவு, தரம், வாய்ப்புக்கள் ஆகிய 4 திசைகளிலும் நாம் விரைந்து செயல்படத் தேவை இருப்பதாக பிரதமர் வலியுறுத்தினார். கன்னியாகுமரியில் 3 நாள் தியானம் மேற்கொண்டதை கடிதத்தில் அவர் குறிப்பிடுகையில் இந்தியாவின் தேசியத் துவம் மற்றும் ஒற்றுமை குறித்து சந்தேகம் உள்ளவர்கள் உட்பட அனைவருக்கும் அழிக்க முடியாத செய்தி ஒன்றை வழங்கும் இடம் குமரி முனை என்று பிரதமர் கூறி உள்ளார்.

தேர்தல் ஆணையர்

மக்களவைத் தேர்தலில், 31.2 கோடி பெண்கள் உட்பட 64.2 கோடி வாக்காளர்கள் வாக்களித்ததன் மூலம், இந்தியா உலக சாதனை படைத்திருப்பதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ் குமார் கூறி உள்ளார். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், உள்ளிட்ட ஜி-7 நாடுகளின் மொத்த வாக்காளர் எண்ணிக்கையை விட, இது அதிகம் என்று, அவர் இன்று புதுடெல்லியில் செய்தியாளர் கூட்டம் ஒன்றில்

பேசுகையில் கூறினார். 2019-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 540 இடங்களில் மறுவாக்குப் பதிவு நடத்தப்பட்ட நிலையில், இம்முறை 39 இடங்களில் மட்டுமே, மறுவாக்குப் பதிவு நடத்தப்பட்டதாக அவர் கூறினார்.

இம்முறை, 1 கோடியே 50 லட்சம் தேர்தல் அலுவலர்கள் மற்றும் பாதுகாப்பு படையினர் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப் பட்டதாகவும், 68 ஆயிரம் கண்காணிப்புக் குழுக்கள் செயல்பட்டதாகவும் தலைமை தேர்தல் ஆணையர் தெரிவித்தார். தேர்தலின் போது பெரிய அளவில் வன்முறை எதுவும் இருக்கவில்லை என்றும், அவர் கூறினார். தேர்தலுக்கான நடத்தை நெறிமுறை மீறல் தொடர்பாக பெறப்பட்ட புகார்களில் 90 சதவிகித புகார்களுக்க தீர்வு காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்கட்சிகளின் பிரதிநிதிக் குழுக்கள் தேர்தல் ஆணையத்திடம் எழுப்பிய எல்லா பிரச்சனைகள் குறித்தும், நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக, திரு ராஜீவ்குமார் தெரிவித்தார். மத்திய அமைச்சர் ஒருவர், தேர்தல் நடத்தும் அதிகாரிகளை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியதாக கூறப்படுவது குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு, வதந்திகளைப் பரப்புதல் சரியானது அல்ல என்று அவர் பதில் அளித்தார்.

நாளை நடைபெற உள்ள வாக்கு எண்ணும் பணிகள் குறித்து, தலைமை தேர்தல் ஆணையர் பேசுகையில் வாக்கு எண்ணிக்கை மையங்களில் மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாகவும். ஒவ்வொரு வாக்கு எண்ணிக்கை மேசைக்கும் நுண் பார்வையாளர் நியமிக்கப்பட்டு, சிசிடிவி கேமரா கண்காணிப்புடன், வாக்கு எண்ணும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

வானிலை

தெற்கு ஆந்திரா மற்றும் அதை ஒட்டிய வடதமிழகத்தின் கடலோர பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், வரும் 9-ஆம் தேதி வரை லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், இன்றைய தினம், நீலகிரி, கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள் தர்மபுரி. கிருஷ்ணகிரி. வேலூர், திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் வரும் 7-ஆம் தேதி வரை வங்ககடல் பகுதிகள், மற்றும், தமிழக கடலோரப் பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில்

அதிகபட்சமாக கள்ளக்குறிச்சியில் 10 சென்டிமீட்டரும், பெரியகுளத்தில் 8 சென்டிமீட்டரும் மழை பதிவாகி உள்ளது.

*நெடுஞ்சாலை*

நாடு முழுவதும் தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச் சாவடிகளில் வாகனங்களுக்கு வசூலிக்கப்படும் கட்டணத்தை, தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம், சராசரியாக 5 சதவிகிதம் உயர்த்தி உள்ளது. இது இன்று முதல் அமலுக்கு வருவதாக ஆணைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்தியாவின் தேசிய நெடுஞ்சாலை கட்டமைப்பில், 900-த்திற்கும் மேற்பட்ட இடங்களில், சுங்கச் சாவடிகள் செயல்பட்டு வருவதும் குறிப்பிடத் தக்கது.

*யுபிஐ*

நாட்டில் யுபிஐ மூலமான பண பரிவர்த்தனைகளின் மொத்த எண்ணிக்கை, கடந்த மே மாதத்தில், 14.04 பில்லியனாகவும், பண பரிவர்த்தனைகளின் மொத்த மதிப்பு, 20.45 டிரில்லியன் ரூபாயாகவும், புதிய உயர் அளவை எட்டி உள்ளது. இது அதற்கு முந்தைய மாதத்தின் அளவை விட, எண்ணிக்கையில் 4 சதவிகிதமும், மதிப்பில் சுமார் 19.64 கோடி ரூபாயும் அதிகம் என்று, தேசியப் பணப் பட்டுவாடாக் கழகம் தெரிவித்துள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

7 கட்டங்களாக நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் பதிவான வாக்குகளை நாளை எண்ணி முடிக்க, எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

புதுச்சேரி மக்களவை தொகுதியில், நாளை இரவு 7 மணி முதல், **9 மணிக்குள், தேர்தல் முடிவுகள்** அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப் படுவதாக, மாவட்ட தேர்தல் அதிகாரி திரு குலோத்துங்கன் கூறி உள்ளார்.

தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் 100-ஆம் ஆண்டு பிறந்த நாளான இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி அன்னாருக்கு புகழாரம் சூட்டி உள்ளார்.

21-ஆம் நூற்றாண்டில் உலகமே மிகுந்த நம்பிக்கையுடன், பாரதத்தை எதிர்நோக்கி இருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

.